மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கெடுபிடி வசூல் எங்கும் இருப்ப தாகத் தெரியவில்லை. சரியாக வசூல் ஆகவில்லையென்ற கணக்கு தான் எனக்கு வந்து கொண்டிருக்கிறதே தவிர, நியாய மாக ஆக வேண்டிய வசூல் கூட ஆகவில்லையென்று தான் கணக்கு வந்து கொண்டிருக்கிறது. நான் முதலிலே சொன்னபடி அதற் கென்று நியதிகள், முறைகள், மற்றவை எல்லாம் இருக்கின்றன. அவற்றினுடைய அடிப்படையிலே தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கு பரிந்துரைகள் செய்து கொண்டிருக்கி றார்கள். அது ஆயப்பட்டு அதனுடைய அடிப்படையிலே முடிவு களை அரசு எடுக்கும் என்று நான் சொல்லியிருக்கிறேன். அது பற்றிய ஆய்வுகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 83 முதல் 85 வரை, மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் பெறுகின்றன.

திருநெல்வேலி மாவட்ட தலைமை மருத்துவமனை

86—(*வினா எண். 1494)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பிரிக்கப்படும் போது மாவட்ட தலைமை மருத்துவமனையை தென்காசியில் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிதாக அமைக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாவட்ட மருத்துவர் அலு வலகமும் மாவட்ட தலைமையிட மருத்துவமனையும் தென் காசியில் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட மருத்துவமனையை என்னு டைய பகுதியில் ஆரம்பித்ததற்காக அரசுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது இந்த மாவட்ட மருத்துவமனை அமைப்பதற்கு இட ஆர்ஜித வேலைகள் எந்த அளவில் இருக்கின்றன, கட்டுமான பணிகள் எப்பொழுது தொடங் கும் என்பதை நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.

1987 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற படுக்கை வசதிகளை அதிகப்படுத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சேகரித்துத் தரப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி அடிக்கடி மின் பற்றாக்குறை ஏற்படுகிற ஒரு இடம். ஏற்கனவே மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கெல்லாம் ஜெனரேட்டர் கொடுக்க வேண்டுமென்று அரசு அளவிலே ஏற்றுக் கொண்டதாக இந்த அவையிலே பல முறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அந்த மாவட்ட மருத்துவமனைக்கு உடனடியாக—கட்டட வேலைகள் துவங்குவது ஒரு புறம் இருந்தாலும் கூட—ஜெனரேட்டர் வழங்க, அதனுடைய முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் உத்தர விடுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

சண்முகா காலேஜ் ஆப் பார்மசி, குடந்தை

87—(*வினா எண். 2844)—திரு. எஸ். செல்லமுத்து, திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை நகரில் ஷண்முகா காலேஜ் ஆப் பார்மசி என்ற கல்லூரி துவக்கப்பட்டு அரசு அங்கீகாரம் கோரி முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை. ஷண்முகா காலேஜ் ஆப் பார்மசி என்ற கல்லூரிக்கு மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வரை தேர்வாளராக இருக்க அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்தது.

(ஆ) மேற் குறிப்பிட்ட கோரிக்கையை பரிசீலனைக்குப் பிறகு அரசு நிராகரித்தது.